சக்தி

ஆசிரியர்

நா. மகாலிங்கம்

ஜூன் '96

ரூ. 5/-

கவிதை

சகஜத் தவிப்பு

தெலுங்கு மூலம் : சல்லா ராதாகிருஷ்ண சர்மா

தமிழில் : இளம்பாரதி

பெயரைப் பார்ப்பதற்கு என் மனம்
தவியாய்த் தவிக்கிறது.

கையில் பத்திரிகை கிடைத்ததுமே
ஒவ்வொரு பக்கமாய்ப் புரட்டுகிறேன்
என் கட்டுரை ஏதேனும் இடம்
பெற்றிருக்கிறதாவென
என்னைப் பற்றி எவரேனும் கட்டுரை
எழுதியிருக்கிறார்களாவென
என்றைக்கோ நான் வெளியிட்ட
கவிதையை
எந்த நண்பராவது மேற்கோள்
காட்டியிருகுகிறார்களாவென
முந்தாநாள் வெளிவந்த என் புத்தகத்தை
எவரேனும்
விமர்சித்திருக்கிறார்களாவென
என் பெயர் எந்த மூலையிலாவது
தென்படுகிறதாவென
எவ்வளவு தவிப்பு! எவ்வளவு தவிப்பு!

எதற்காகவோ என் மனம்
இருந்தாற்போலிருந்து
பழங்காவியத்தை நாடிற்று.

காவியத் தலைவனின் குணகணங்களை
நகற் கீற்றளவை மலையாகக்
காட்டினான்;
தலைவியின் எழிலுருவை
என்னென்னவோ கூறிச் செதுக்கிக்
காட்டினான்;
வான்நோக்கிப் படரும்
சிறுகொடியைப்
பெருமரமாய்ப் பெருக்கிக் காட்டினான்

ஆனால் தன்னைக் குறித்துக்
குறைவாகவே சொல்லிவைத்தான் கவி!
புகழ்மீது அவனுக்கு நாட்டமில்லை
போலும்!

வானைத் தொடும் கோபுரம் மீது
என் பார்வை படர்ந்தது. ஆமாம்,
எந்த மாமன்னனோ
எந்தச் செல்வந்தனோ
அந்த உயர்கோபுரத்தைக் கட்டச்
செய்திருக்கலாம்.

ஆனால் அதைக் கட்டிய அந்த
உயர்ந்தோன் எவனோ
அவனைப் பற்றி எள்ளளவும்
தெரியவில்லை!

கோவிலுக்குள் அமைந்த அற்புதச்
சிற்பங்கள்
கூடுகட்டிக்கொண்ட என் புகழாசையை
எள்ளி நகையாடின இரக்கமின்றி.

அந்தப் பெயர் தெரியாத சிற்பி எவனோ
அந்தக் கலை விற்பன்னன் எவனோ
வாயில்லாத அந்தச் சிலைகளுக்குப்
பேச்சும் இசையும் கற்றுக்கொடுத்தான்
உயிரில்லா அந்தக் கருங்கற்களை
சதையும் ரத்தமுமாய் மாற்றிவைத்தான்.

மனங்கவரும் சிற்பங்களாய்ப்
பாறாங்கற்களை உருமாற்றினான்
ஆனால் மறந்துவிட்டான்
தன் பெயரைச் செதுக்கிவைக்க!

அவன் நிஷ்காம்ய கர்மயோகி!
அவன் தன்னலமற்ற கலைஞன்!
புகழ்நாட்டம் சற்றும் இல்லாதவன்
பெயருக்காக வேண்டி அலைந்து
திரியாதவன்.

அவனது பெருமைக்கு முன்னால்
கூனிக் குறுகியது என் புகழ்த் தவிப்பு!